மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். பேரவைத் தலைவர் என்பவர் இந்த அவையினுடைய ஒட்டுமொத்த உறுப்பினர்களுடைய உணர்ச்சிகளினுடைய ஒரு வடிவம், ஒரு பிரதிநிதி. நான் என்னுடைய கருத்துகளை மட்டுமே இங்கே திணிக்க விரும்பவில்லை. பேரவையிலே வழங்கக்கூடிய கருத்துகள் பேரவையினுடைய பெரும்பாலான உறுப்பினர்களுடைய மனதைப் புண்படுத்தக்கூடிய கருத்துகளாக இருக்குமானால் அவற்றை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. *(கூச்சல்-குழப்பம்)*

(பேராசிரியர் க. அன்பழகன் அவையிலிருந்து வெளியேறினார்.) (கூச்சல்-குழப்பம்)

1. அறிவிப்புகள்-தொடர்ச்சி

(இ) நல்லிணக்க நாள் உறுதிமொழி நிகழ்ச்சியில் பங்கேற்க பேரவையை ஒத்திவைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) உட்காருங்கள். பழைய நிகழ்ச்சிகள் முடிந்துவிட்டன. பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

"நல்லிணக்க நாளை முன்னிட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று காலை 11-00 மணிக்கு தலைமைச் செயலகப் பிரதானக் கட்டடத்திற்கு அருகிலுள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் நல்லிணக்க நாள் உறுதிமொழியைச் செய்து வைக்க உள்ளார்கள். அந்நிகழ்ச்சியில் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில் பேரவை காலை 10-45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்று, மீண்டும் 11-15 மணிக்குக் கூடும்."

ஆகவே, இப்போது பேரவை ஒத்திவைக்கப்படுகிறது. பேரவை 11-15 மணிக்கு மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை முற்பகல் 10-45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS